தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப் படிவம் ஏதும் உள்ளதா என்று அவ்வப்பொழுது கேள்விகள் வரப்பெறுகின்றன. மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்வது தொடர்பான வழிமுறைகள் மற்றும் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## வழிமுறைகள்:

(i) இரண்டாம் மேல்முறையீட்டிற்கு கட்டணம் ஏதும் இல்லை.

(ii) மேல்முறையீட்டு விண்ணப்பம் வெற்று வெள்ளைத்தாளில் செய்யப்படவேண்டும்.

(iii) விண்ணப்பம் தட்டச்சு செய்யப்பட்டோ (கணினி மூலம் எடுக்கப்படும் அச்சு நகல் உட்பட) அல்லது தெளிவாக எழுதப்பட்டோ இருக்க வேண்டும்.

(iv) இரண்டாம் முறையீடு என்பது சட்ட பூர்வமான நடவடிக்கை என்பதால், letter – head படிவத்தில் அனுப்புவதையும், மனுவிற்குத் தொடர்பில்லாத விவரங்களைச் சேர்ப்பதையும் தவிர்க்க வேண்டும்.

(v) மேல்முறையீட்டு விண்ணப்பம் தலைமை தகவல் ஆணையர் அல்லது மாநில தகவல் ஆணையர்கள் பெயரில் முகவரியிடப்படக்கூடாது.
[தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 3(2)–ன்படி].

(vi) மேல்முறையீட்டில் விண்ணப்பதாரர் கையெழுத்திடவேண்டும்.

(vii) மேல்முறையீடுகள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக திருப்பப்படலாம்:

(1) முதற்கட்டமாக பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மேல்முறையீட்டு அலுவலருக்கோ மனு அனுப்பப்படாமல் ஆணையத்தில் நேரடியாக செய்யப்படும் மனுக்கள்.

(2) ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்வதற்குமுன் பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு மனு செய்யவில்லை.

(3) மனுதாரர் ஒரு பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவலைத் திரட்டி ஆணையம் அவருக்கு அளிக்கக் கோரும் மனுக்கள். ஆணையம் பல்வேறு துறைகளில் உள்ள தகவல்களைத் திரட்டி பாதுகாக்கும் தொகுப்பகம் அல்ல.

(4) முதல் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து பதில் வரப்பெற்ற அல்லது வரப்பெற வேண்டிய தேதிக்கு 90 நாட்கள் கழித்து செய்யப்படும் மேல்முறையீடு [தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 19(3)ன்படி].

(5) தேவையான ஆவணங்கள் இணைக்கப்படவில்லை.

(6) பொது அதிகார அமைப்பு மாநில தகவல் ஆணைய வரம்பிற்குள் வரவில்லை.

(7) மேல்முறையீடு ஒப்பமிடப்படவில்லை.

(8) மேல்முறையீடு படிக்கக்கூடிய அல்லது புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இல்லை.

(9) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான பொது அதிகார அமைப்பு எதற்கும் சம்பந்தப்பட்டதல்ல.

(10) இந்த மேல்முறையீடு / புகார் மனு ஒரு அமைப்பின் / நிறுவனத்தின் / கட்சியின் கடிதத்தாளில் (லெட்டர்–ஹெட்) உள்ளது.

(11) ஒன்றுக்கும் மேற்பட்ட தகவல் கோரிய மனுக்களின் மீது ஒரே இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(viii) சட்டப்பிரிவு 19(3)ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டிற்கான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடு தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள் 2012, விதிகள் 3 மற்றும் 4–ன்படி தேவையான விவரங்கள் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

(ix) இந்த மேல்முறையீட்டுப் படிவம் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)–ன் கீழான மேல்முறையீட்டிற்கு மட்டுமே பொருந்தும். பிரிவு 19(1)–ன் கீழ் செய்யப்படும் (அதாவது பொதுத் தகவல் அலுவலருக்கு மேலான அலுவலருக்கு அனுப்பப்படும்) முதல் மேல்முறையீட்டிற்குப் பொருந்தாது.

## <u>இரண்டாம் மேல்முறையீட்டு விண்ணப்பப் படிவம்</u>

தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்பாக

தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–ன் பிரிவு 19(3)–ன்படியான இரண்டாம் மேல்முறையீடு

(தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள் 2012–ன் விதி 3ஐ காண்க)

| விண்ணப்பதாரரின் விவரம் | |
|---|---|
| பெயர் | |
| முகவரி | |
| கைபேசி எண் | |
| மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) | |

அய்யா,

தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005ன் பிரிவு 19(3)–ன்படி, நான் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்கிறேன். அது குறித்த விவரங்கள் பின்வருமாறு:

### <u>I. கால வரிசைப்படி</u>

| | | நாள் |
|---|---|---|
| 1 | தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) ன் கீழ் பொது தகவல் அலுவலருக்கு விண்ணப்பித்த நாள் | |
| 2 | பொது தகவல் அலுவலரின் எல்லை வரம்பிற்குள் வராத மனு பிறிதொரு பொது தகவல் அலுவலரிடம் மாற்றம் செய்த நாள் | |
| 3 | பொது தகவல் அலுவலர் ஒப்புகை அளித்த அல்லது பெற்றுக்கொண்ட நாள் (தெரியுமெனில்) | |
| 4 | பொது தகவல் அலுவலரிடமிருந்து பதில் பெறப்பட்ட நாள் | |
| 5 | சட்டப் பிரிவு 19(1)–ன் படி மேல்முறையீடு செய்த நாள் | |
| 6 | மேல்முறையீட்டு அலுவலர் ஒப்புகை அளித்த அல்லது பெற்றுக்கொண்ட நாள் (தெரியுமெனில்) | |
| 7 | பதில் பெறப்பட்ட நாள் அல்லது மேல்முறையீட்டு அலுவலரின் ஆணை பெறப்பட்ட நாள் | |

## II.பொது அதிகார அமைப்பு விவரம்:

8. சம்பந்தப்பட்ட துறையின் பெயர்:

| | அலுவலர் | பெயர் (தெரிந்தால்), பதவி, முகவரி. |
|---|---|---|
| 9 | எந்த பொது தகவல் அலுவலருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது | |
| 10 | பொது தகவல் அலுவலரால் யாருக்கு மனு மாறுதல் செய்யப்பட்டது. (மாறுதல் செய்யப்பட்டிருப்பின்) | |
| 11 | மேல்முறையீட்டு அலுவலர் | |
| 12 | எந்த பொது தகவல் அலுவலரால் பதில் அனுப்பப்பட்டது (வரிசை எண்.9–ல் குறிப்பிடப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் அல்லாமல் வேறு பொதுத் தகவல் அலுவலராயிருப்பின்) | |
| 13 | எந்த மேல்முறையீட்டு அலுவலரால் பதில் அனுப்பப்பட்டது (வரிசை எண்.11–ல் குறிப்பிடப்பட்டவரல்லாமல் வேறு மேல்முறையீட்டு அலுவலராயிருப்பின்) | |

## III. மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:

| | |
|---|---|
| 14 | மேல்முறையீட்டிற்கான காரணங்கள்(கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் பொருத்தமானவற்றிற்கு எதிராக (✓) செய்யவும் |
| (i) | பொதுத் தகவல் அலுவலரால் பதில் அனுப்பப்படவில்லை |
| (ii) | மேல்முறையீட்டு அதிகார அலுவலர் ஆணை வழங்கவில்லை |
| (iii) | எவ்வித முகாந்திரமுமின்றி பதில் மறுக்கப்பட்டுள்ளது |
| (iv) | வழங்கப்பட்டபதில் சரியானதல்ல/திசை திருப்பும் பதில்/தவறு |
| (v) | ஒரு பகுதிக்கு மட்டுமே பதில்/முழுமையற்ற தகவல் |

## IV. மேல்முறையீட்டிற்கான அடிப்படை:–

(பதில் தரப்படாத மற்றும் திருப்தி தராத ஒவ்வொரு கோரிக்கைக்கும் கீழ்க்கண்டவாறு விவரங்கள் அளிக்கப்படவேண்டும்)

| தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் இனம் எண் | இந்த இனம் குறித்த தகவல் தொடர்பான குறைபாடு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(மேலே குறைபாடு தொடர்பான கலத்தில், மேல்முறையீடுதாரர் பதில் பெறப்படவில்லையெனில் ‘பதில் பெறப்படவில்லை’ என குறிப்பிடலாம். பதில் தரப்பட்டு அதில் மேல்முறையீடுதாரருக்கு திருப்தியில்லையெனில் அதற்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்).

**<u>V. வேண்டுகோள்:</u>**

**உறுதிமொழி**

விண்ணப்பதாரராகிய நான்,..........................................................................................................த/பெ அல்லது க/பெ ............................ மேலே என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தகவல்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரிந்தவை என்றும் அவை அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மை எனவும் சரியானவை எனவும் நான் நம்புகிறேன் என இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

நான் இதற்கு முன்னர் இதே பொருள் குறித்து ஆணையத்திடம் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

**மேல்முறையீட்டாளரின் கையொப்பம்.**